පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා - අංක 487

ආයතනයේ නම: අධිකරණ සහ ජාතික ඒකාබද්ධතා අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் :487

நிறுவனத்தின் பெயர்: **நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு**

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

**Parliamentary Series No. 487**

**Name of the Institution: Ministry of Justice National Integration**

**Submission of observations of honorable minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No: 119(4)**

மாதிரிப் படிவம் (இலக்கம் 01)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல : 487

நிறுவனத்தின் பெயர் : பாதுகாப்பு அமைச்சு

| குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் | பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை |
|---|---|
| இலங்கைக் கடற்பரப்பில் இயங்கும் கப்பல்களிடமிருந்து உரிய கட்டணங்களை அறவிடுவது தொடர்பான முன்மொழியப்பட்ட சட்டவரைவின் தற்போதைய நிலை தொடர்பான அறிக்கை நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சினால் குழுவுக்கு வழங்குதல் | குறித்த சட்டவரைவு 2024 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க தேசிய நீரளவைச் சட்டமாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. (சட்டத்தின் பிரதியொன்று இணைப்பு 01 இன் மூலம் சமர்பிக்கப்பட்டுள்ளது.) |

செயலாளர்,
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு.

Ayesha Jinasena, P.C.
Secretary
Ministry of Justice and National Integration
No: 19, Sri Sangaraja Mawatha,
Colombo 10.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2024* ஆம் ஆண்டின் *7* ஆம் இலக்க,
## தேசிய நீரளவைச் சட்டம்

---

*[2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2024*, பெப்புருவரி மாதம் *02* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா *84.00*** **தபாற் செலவு : ரூபா *150.00***

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2024 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க,**
**தேசிய நீரளவைச் சட்டம்**

*[2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச.வ. ஓ 36/2023*

***1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேச சமவாயத்தின்கீழான இலங்கையின் குறித்த சில குறிப்பிட்ட கடப்பாடுகளுக்குப் பயன்கொடுப்ப தற்காகவும்; தேசிய நீரளவைசார் அலுவலகத்தைத் தாபிப்பதற்காகவும்; நீரளவைசார் அளவையாளர் களையும் கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலர்களை யும் பதிவு செய்வதற்காகவும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.***

*(இச்சட்டத்தில் "சமவாயம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேச சமவாயம், 1974 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆந்தேதியன்று கடலில் உயிர்காப்புக்கான சர்வதேச மாநாட்டினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1980 ஆம் ஆண்டு மே 25 ஆந்தேதியன்று வலுவுக்கு வந்ததாதலாலும்:* *முன்னுரை*

*அத்துடன் இலங்கை அரசாங்கம், 1983 ஆம் ஆண்டு ஓகத்து 30 ஆந்தேதியன்று 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்க்காப்புக்கான சர்வதேச சமவாயத்துக்கு இணங்கியதாதலாலும்:*

*அத்துடன் 2019 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம், 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேச சமவாயத்துக்கு ஏலவே பயன்கொடுத் துள்ளபோதிலும் மேற்கூறப்பட்ட சமவாயத்தின் அத்தியாயம் V இன் ஒழுங்குவிதிகள் 4 மற்றும் 9 என்பன தொடர்பாக இலங்கைக்குள்ள கடப்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கான குறிப்பிட்ட சட்ட ஏற்பாடுகளைச் செய்வது அவசியமாகவுள்ளதாதலாலும்:*

*ஆகவே இப்பொழுது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக் வரும் தேதியும்*

**1.** (1) இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, தேசிய நீரளவைசார் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இப்பிரிவு தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள் சட்டமூலம் பாராளுமன்றச் சட்டமொன்றாக வருகின்ற தேதியன்று நடைமுறைக்குவருதல் வேண்டும்.

## பாகம் I

### தேசிய நீரளவைசார் அலுவலகத்தைத் தாபித்தல்

*தேசிய நீரளவைசார் அலுவலக த்தைத் தாபித்தல்*

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "அலுவலகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய நீரளவைசார் அலுவலகம் எனவழைக்கப் பட்டு அறியப்படவேண்டிய அலுவலமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) அலுவலகமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித் தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக விருத்தல் வேண்டுமென்பதுடன் இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்டதாகவிருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத்தொடுக்கலாம், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

*அலுவலகத்தின் குறிக்கோள்கள்*

**3.** அலுவலகத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண் டும்–

(அ) சமவாயத்தினால் தேவைப்படுத்தப்பட்ட நீரளவைசார் சேவைகளை வழங்குவதற்குப் பொறுப்பாகவிருத்தல்;

(ஆ) கப்பல்களின் காப்பான கப்பற்போக்குவரத்துக்கான செம்மையான கப்பற்றுறைசார்ந்த விளக்கப்படங் களைக்

காண்பித்தலும் பேணுதலும் கப்பற்போக்கு வரத்துக்கான நீராழங்கள், நீரின்கீழான சிறப்புக் கூறுகள், கரையோரக் கோடுகள், இடையுறுகள் மற்றும் உறுதுணைகள் பற்றிய தகவலை வழங்குதலும்;

(இ) கப்பற்றுறைசார்ந்த விளக்கப்படங்களை நாளது வரையாக்குவதற்காகவும் சீராக்குவதற்காகவும் தரவு களைச் சேகரித்தலும் கடலோரக் காப்பை உறுதிப் படுத்துதலும்;

(ஈ) கப்பற்போக்குவரத்துக்கான உறுதுணைகளைத் தாபித் தலும் பேணுதலும் அவற்றின் நிலைகளைத் தீர்மானித்து விசேடமாகச் சவாலாகவிருக்கும் நிலைமைகளில் காப்பானமுறையில் கப்பற்போக்குவரத்தை நடாத்து வதற்குக் கப்பலோட்டிகளுக்கு உதவுதலும்; அத்துடன்

(உ) துறையில் பயன்படுத்தப்பட்ட நீரளவைசார் அளவை தொழினுட்பங்களையும், தரவுச் செய்முறைப்படுத்தல் முறைகளையும் தொழினுட்பவியல்களையும் சீராக்குதல்.

அலுவலகத்தின் தத்துவங்களும், கடமைகளும் பணிகளும்

**4.** அலுவலகத்தின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) எல்லா வகையினவையுமான கப்பற்போக்குவரத்துச்சார் விளக்கப்படங்களையும், வெளியீடுகளையும், நீரளவைசார் சேவைகளையும் தயாரிக்கும், விநியோகிக்கும், விற்பனை செய்யும் மற்றும் நாளதுவரையாக்கும் நோக்கத்துக்காகக் கடல்சார் புவியியல் இடஞ்சார்ந்த தரவுகளைச் சேகரித்த லும், பேணிக்காத்தலும், ஒழுங்கு படுத்துதலும், தொகுத்த லும்;

(ஆ) இலங்கையின் கடலோர வலயங்களில் காப்பான கப்பற்போக்குவரத்துக்குத் தேவைப்பட்ட எல்லா வகையி னவையுமான கப்பற்போக்குவரத்துச்சார் விளக்கப் படங்களையும் வெளியிடுதல்;

(இ) இலங்கையின் கடலோர வலயங்களின் நீரளவைகள்சார் அளவை நிறைவேற்றுதல்;

(ஈ) தேசிய மற்றும் பிராந்தியப் பந்தோபஸ்துவின் அந்தரங்கத்தன்மையின்மீதும் காப்பின்மீதும் தாக்கமொன்றைக் கொண்டிருக்கக்கூடிய எல்லாக் கடலோரத் தரவுகளை யும் வைத்திருத்தல்:

ஆயின், அலுவலகத்தின் அபிப்பிராயத்தில் தேசியப் பந்தோபஸ்துவின்மீது சம்பந்தமொன்றைக் கொண்டிருக்கக்கூடிய அத்தகைய எவையேனும் தரவுகளை வெளியிடுமுன்னர் அல்லது பரப்புமுன்னர் பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் ஒருப்பாட்டை அது பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்;

(உ) சர்வதேசக் கப்பற்றொழிலின் காப்பை உறுதிப் படுத்துதல்–

(i) இலங்கையினால் கடைப்பிடிக்கப்பட்டசர்வதேச நீரளவைசார் நியமங்களுக்கும் அளவுக் குறிப்பீடுகளுக்கும் இணங்கப் போதிய அளவை நிறைவேற்றுதல்;

(ii) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் என்றவகையாக அத்தகைய அளவுக் குறிப்பீடுகளை வெளியிடுதல்;

(iii) ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்களுக் கிணங்க மார்க்கங்கள், கலங்கரை விளக்கங்கள், நாற்புறத் தூண்கள், எல்லா வகையினவையுமான மிதவைகளையும் எச்சரிக்கை ஒளிகளையும் அடையாளங்காணுதல் மற்றும் கடல் பொங்குதலும் வடிதலும் பற்றிய தரவுகள் தொடர்பிலான எல்லாத் தகவல்களும் என்பவற்றை உள்ளடக்குகின்ற கப்பல்துறை சார்ந்த விளக்கப்படங்களையும் கப்பற்றுறை சார்ந்த வெளியீடுகளையும் தயாரித்தலும் வழங்குதலும்;

(iv) கடல்சார் விபத்துக்கள்மீதான தகவல்களைக் கொண்டுள்ள அறிவித்தல்களைத் தயாரித்தலும் கடலோடிகளுக்கு வழங்குதலும் அத்தகைய விபத்துக்குள்ளான எவரேனுமாளை மீட்டலும்; அத்துடன்

(v) நாளதுவரையாக்கப்பட்ட அச்சிடப்பட்ட மற்றும் இலத்திரனியல் கப்பற்றுறை சார்ந்த விளக்கப்படங் களும் வெளியீடுகளும் தொடர்பாக அறிவுறுத்தல் களை வழங்குதல்;

(ஊ) சர்வதேச சமவாயங்களுக்கும் நியமங்களுக்கும் இணங்கக் கப்பற்றுறைசார்ந்த விளக்கப்படங்களையும் வெளியீடு களையும் பேணுதல்;

(எ) இலங்கையின் கடலோர வலயங்களுடன் தொடர்புபட்ட செம்மையான அத்துடன் நம்பகமான நீரளவைசார் மற்றும் கப்பற்போக்குவரத்துச்சார் தகவல்களை வழங்குதல்;

(ஏ) சர்வதேச சமவாயங்களுக்கும் நியமங்களுக்கும் இணங்க நீரளவைசார் அளவை மற்றும் கப்பற்றுறையைச் சார்ந்த நிலப்படவியல்பற்றிய பயிற்சியை நடாத்துதல்;

(ஐ) இலங்கையின் கரையோர வலயத்தில் காப்பையும் வேறு கப்பற்போக்குவரத்துச்சார் தேவைப்பாடுகளையும் உறுதிப்படுத்துவதற்கெனக் கரையோர வலயத்தில் நீரோட்டங்களைக் கணக்காணித்தலும், பதிதலும், அவற்றின்மீதான அறிக்கைமீதான அறிக்கைகளைத் தயாரித்தலும்;

(ஒ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான எல்லா நீரளவைசார் தரவுகளையும், நீர்நிலையியற்சார் தரவுகளையும், சேகரித்தலும், ஒழுங்குபடுத்துதலும், வழங்குதலும், பேணிக்காத்தலும், பேணுதலும்;

(ஓ) பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஏதேனும் முகவராண்மைக்கு, நிறுவனத்துக்கு அல்லது ஒழுங் கமைப்புக்கு இயைபான எழுத்திலான சட்டத்துக்கமைய அவசியமான உதவிவழங்குதல்;

(i) கரையோர முகாமைத்துவமும் அபிவிருத்தியும்;

(ii) சாத்தியக்கூறுக்கற்கைகளையும் மதிப்பீடுகளையும், சேறுவாறுதல் தொழிற்பாடுகளையும் நடாத்துதலும், துறைமுக வசதிகளைப் பேணுதலும் அபிவிருத்திசெய்தலும்;

(iii) கரையோர மண்ணரிப்பைக் கண்காணித்தலும் கட்டுப்படுத்துதலும்;

(iv) கடலிலிருந்து காணியை மீட்டலும் கைத்தொழிற் கழிவுகளுக்காகக் கடலில் கையுதிர்ப்பு அமைவிடயங்களைத் தாபித்தலும் அவற்றைக் கண்காணித்தலும்;

(v) ஆராய்ச்சியை நடாத்துதலும் நீர்வாழ் உயிரின வளங்களை அபிவிருத்திசெய்தலும்;

(vi) கரையோர நீர்ப்பரப்புகளில் கப்பற்சரக்கு மற்றும் பயணி இடப்பெயர்விலான ஏதேனும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்;

(vii) கரையோர நீர்ப்பரப்புகளில் உட்கட்டமைப்பு நிர்மாணம், அபிவிருத்தி மற்றும் வேறேதேனும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்;

(viii) கரையோர வலயங்களில் சுற்றுலாப் பயணத்தையும் பொழுதுபோக்குச் செயற்பாடுகளையும் ஊக்குவித்தல்; அல்லது

(ix) கடல்சார் தீழ்ப்புத்தடுப்பு மற்றும் பேரழிவு முகாமைத்துவத்தில் ஈடுபடுதல்;

(ஔ) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளில் கடலோர எல்லைவரையறுத்தல் தொடர்பில் உதவியளித்தலும் மதியுரை வழங்குதலும்;

(க) நீர்க்குழாய்களையும் கடலின்கீழான கம்பிவட முறைமைகளையும் இடுதலும் மற்றும் கனிப்பொருள் பிரித்தெடுத்தற் கிணறுகளைத் தாபித்தலும் உட்பட அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக அவசியமான கலந்தாலோசனை மற்றும் வேறு உதவியை வழங்குதலும் அத்தகைய செயற்பாடுகள் தொடர்பாகத் தரவுகளையும் தகவல்களையும் பேணிக்காத்தலும்;

(ங) விதித்துரைக்கப்பட்ட கல்விசார் நியமங்களைப் பேணுவதற்கு இலங்கையின் நீர்ப்பரப்புகளில் நீரளவைசார் மற்றும் கடல்சார் புவியியல் இடஞ்சார்ந்த தகவல்களில் ஈடுபட்டுள்ள ஏனைய கல்வி நிறுவனங்களுடன் ஒருங்கிணைதல்;

(ச) நீரளவையில் உயர்வான உயர்தொழில்சார் நியமங்களைப் பேணுவதற்கு இலங்கையினுள்ளான அல்லது இலங்கைக்கு வெளியேயான வேறு நிறுவனங்களுடன் ஒருங்கிணைதல்;

(ஞ) நீரளவைசார் அளவை மற்றும் கப்பற்றுறைசார்ந்த நிலப்படவியலுடன் தொடர்புபட்ட உயர்கல்விப் பயிற்சியை நடாத்துதலும் இயைபான துறைகளில் அனுபவமுடைய வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் அவசியமான தொழினுட்ப மற்றும் உயர்தொழிற்சார் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளுதலும்;

(ட) இலங்கையின் நீர்ப்பரப்புகளில் கப்பற்போக்குவரத்திலான காப்பை அதிகரிப்பதற்கு இயைபான அதிகாரிகளுக்கு உதவுதலும், இலங்கையின் நீர்ப்பரப்புகளில் பொருளாதாரச் செயற்பாடுகளை முகாமைசெய்வதற்கு அவ்வதிகாரிகளுக்கு அவசியமான உதவியை வழங்குதலும்;

(ண) காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுதல்:

ஆயின், எவ்வாறாயினும், அலுவலகத்துக்கு அளிக்கப்படும் எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகளும், கொடைகளும் அல்லது நன்கொடைகளும் தொடர்பில் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்;

(த) தோதானதென அது கருதக்கூடியவாறு ஏதேனும் வங்கியுடன் ஏதேனும் கணக்கைத் திறத்தலும், பேணுதலும், தொழிற்படுத்துதலும்;

(ந) அலுவலகத்தின் நிதியத்தை முகாமைசெய்தலும், கட்டுப்படுத்துதலும், நிருவகித்தலும், தொழிற்படுத்துதலும்;

(ப) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாதவாறாக அலுவலகத்துக்குச் சொந்தமான அத்தகைய பணத்தொகையை முதலீடுசெய்தல்;

(ம) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவுசெய்தல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்பனைசெய்தல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல்;

(ய) அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அவசியமெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் ஒன்றில் நேரடியாக அல்லது அலுவலகத்தின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது முகவரினூடாக நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் செய்துகொள்ளுதலும் புரிதலும்;

(ர) அலுவலகத்தின் அலுவலர்களினது நிருவாகம் தொடர்பிலான விதிகளை ஆக்குதல்;

(ல) அலுவலகத்தினால் அளிக்கப்பட்ட ஏதேனும் சேவைக்கான கட்டணங்களை அல்லது விதிப்பனவுகளை அறவிடுதல்;

(வ) அலுவலகத்தின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும், ஊழியர்களையும், முகவர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், அவர்களுக்கு ஊதியமளித்தலும், அவர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும்;

(அஅ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே அலுவலகத்தின் அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் பயிற்சியளித்தல்;

(ஆஆ) அதன் பணிகளின் பயனுள்ள நிறைவேற்றுகைக்கான குழுக்களை நியமித்தல்; அத்துடன்

(இஇ) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதன் இடைநேர் விளைவான அல்லது அதற்கு உகந்தனவான அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

## பாகம் II

### அலுவலகத்தின் அலுவல்களை நிருவகித்தலும் முகாமை செய்தலும்

**5.** (1) அலுவலகத்தின் அலுவல்களினது நிருவாகமும் முகாமையும் (இச்சட்டத்தில் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய நீரளவைசார் பேரவைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

*அலுவலகத்தின் நிருவாகமும் முகாமையும் பேரவைக்கு உரித்தாக் கப்படுதல்*

(2) பேரவையானது, இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு உசிதமானவொரு முறையில் அலுவலகத்தின் அலுவல்களை நிருவகித்து முகாமைசெய்யும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தினால் அலுவலகத்துக்கு அளிக்கப்பட்ட, குறித்தளிக்

கப்பட்ட, அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

பேரவையை அமைத்துரு வாக்குதல்

**6.** (1) பேரவையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது —

(i) பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு மேலதிகச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது பிரதி நிதி;

(ii) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு மேலதிகச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது பிரதிநிதி;

(iii) கடற்றொழில் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு மேலதிகச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையில் உள்ள அவரது பிரதிநிதி;

(iv) வெளிநாட்டு அலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு மேலதிகச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது பிரதிநிதி;

(v) (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட இலங்கைக் கடற்படையின் ஏவுநர்;

(vi) *1981 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, தேசிய நீர்வாழ் உயிரின வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட தேசிய நீர்வாழ் உயிரின வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட தேசிய நீர்வாழ் உயிரினவளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் ஆளும் சபையின் தவிசாளர்;*

(vii) *நிலஅளவையாளர் தலைமையதிபதி;*

(viii) *1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி;*

(ix) *1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் நியமிக் கப்பட்ட துறைமுகத் தலைவர்;*

(x) *2009 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, கரையோரக் காவல் திணைக்களச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட கரையோரக் காவல் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி;*

(xi) *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது அதன் துணைத்தவிசாளர்;*

(xii) *1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட புவிச்சரித்திரவியல் நிலஅளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தினது முகாமைத்துவச் சபையின் தவிசாளர்;*

(xiii) *2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, கடல்சார் தீழ்ப்பு தடைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட கடல்சார் சூழற்பாதுகாப்பு அதிகாரசபையின் தவிசாளர்;*

(xiv) *1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட கரையோர மற்றும் கரையோர மூலவள முகாமைப் பணிப்பாளர் தலைமையதிபதி; அத்துடன்*

(xv) *1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபையின் தவிசாளர்; அத்துடன்*

(ஆ) ஆகக் குறைந்தது ஒரு தகைமைபெற்ற நீரளவைசார் அளவையாளரும் மற்றும் ஒரு கப்பல்துறைசார்ந்த நிலப்படவியளரும் உட்பட, (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப் படும்) நீரளவைத் துறைகளில் அல்லது நீரளவையுடன் தொடர்புபட்ட கற்கையில் அனுபவத்தைக் கொண்டிருப் பவர்களும் கல்விசார் அல்லது உயர்தொழிற்சார் தகைமைகளையுடையவர்களும் அமைச்சரினால் நியமிக் கப்பட்டவர்களுமான மூன்று உறுப்பினர்கள்.

(2) இலங்கைக் கடற்படையின் ஏவுநர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பதவிவழி உறுப்பினரொருவராக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய நியமனம் (358ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கடற்படைக்குரியதல்லாத கடமைகளின் நிறைவேற்றம் தொடர்பில் அச்சட்டத்தின் நியதிகளின்படி செய்யப்படுதல் வேண்டும்.

பேரவையின் தவிசாளர்

**7.** (1) பேரவையின் தவிசாளராகவிருப்பதற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவரை அமைச்சர் நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் தனது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை எத்தேதியன்று அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து அது பயனுடைய தாதலும் வேண்டும்.

(3) அமைச்சர் அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங் களுக்காக தவிசாளர் பதவியிலிருந்து தவிசாளரை அகற்றலாம்.

(4) இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக் கமைய, தவிசாளரின் பதவிக்காலம், பேரவையில் அவரது உறுப் பாண்மைக் காலப்பகுதியாதல் வேண்டும்.

(5) சுகவீனம், வேறு இயலாமை, இலங்கையில் இல்லாமை என்பன காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தவிசாளர் தனது பதவிக்குரிய கடமைகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக உள்ளவிடத்து, அமைச்சர் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினராக அவரது வழமையான கடமைகளுடன் சேர்த்து மேலதிமாகத் தவிசாளராகச் செயலாற்றுவதற்கு வேறெவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரை நியமிக்கலாம்.

**8.** ஆளொருவர் பின்வருமாறு இருப்பின் பேரவையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும்:- பேரவை உறுப்பினரொருவராக விருப்பதிலிருந்தான தகைமையீனங்கள்

(அ) பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) இலங்கைப் பிரசையொருவராக இருந்திருந்தால் அல்லது இல்லாதொழிந்தால்;

(இ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலு விலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்த சுவாதீன மற்றவராகக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத் தப்பட்டால்;

(ஈ) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்கவகையற்றவராக அல்லது வங்கிமுறித்தவராக வெளிப் படுத்தப்பட்டு பொறுப்புவிடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்கிமுறித்தவராக இருந்தால்;

(உ) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழானவொரு தவறு தொடர்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் புலனாய்வொன்றுக்கு அமைந்தவராக இருந்தால்;

(ஊ) இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டதும் ஆறு மாதங்களுக்கு மேற்பட்டதுமான மறியற்றண்டனைத் தீர்ப்பை அனுபவித்துக்கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்;

(எ) அலுவலகத்தினால் அல்லது அலுவலகத்தின் சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை வைத்திருந்தால் அல்லது துய்த்தால்; அல்லது

(ஏ) பேரவையின் உறுப்பினராக அவரது பணிகளை அவர் நிறைவேற்றுவதனைப் பங்கமானமுறையில் பாதிக்கக் கூடிய சாத்தியங்கொண்டவரான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்.

பதவிக்காலம்

**9.** பேரவையின் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினரும், பதவி விலகுகை, இறப்பு அல்லது பதவியகற்றுகை என்பனமூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, தொடர்ச்சியானதாயினுஞ்சரி அல்லது வேறு வகையானதா யினுஞ்சரி, மேலும் ஒரு தவணைக்கு மேற்படாமல் மீளநியமிக் கப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

பதவிவிலகுதலும் பதவியிலிருந்து அகற்றப்படுதலும்

**10.** (1) பேரவையின் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் எந்நேரத்திலும் அப்பொருள்பட அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை, அது எழுத்தில் அமைச்சரினால் எத்தேதியன்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், சுகவீனம், உடற்குறைபாடு அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அமைச்சர், 6 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவர் இல்லாதிருக்கும்போது அவரது இடத்திற் செயலாற்றுவதற்கு வேறோராளை நியமிக்கலாம்.

(3) அமைச்சர், அதற்கென குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரைப் பதவியிலிருந்து அகற்றலாம். பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ள நியமிக்கப்பட்டவோர் உறுப்பினர், பேரவையின் உறுப்பினரொருவராக மீளநியமிக்கப்படுவதற்கு அல்லது வேறேதேனும் தன்மையில் பேரவைக்குச் செயலாற்றுவதற்கு தகவுடையவராதலாகாது.

(4) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் இறக்குமிடத்து, பதவிவிலகுமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து, அமைச்சர், 6 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவரினிடத்தில் ஓராளை நியமிக்கப்படலாமென்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பதவிவகித்தலும் வேண்டும்.

பேரவையின் கூட்டநடப் பெண்ணும் கூட்டங்களும்

**11.** (1) பேரவையின் கூட்டங்கள் ஆகக்குறைந்தது ஒரு மாதத்திற்கு ஒருதடவையேனும் நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் பேரவையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் ஏழு உறுப்பினர்களாதலும் வேண்டும்.

(2) தவிசாளர், பேரவையின் ஒவ்வொரு கூட்டத்துக்கு தலைமை தாங்குதல் வேண்டும். பேரவையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தவிசாளர் வருகைதராதிருக்கையில் சமூகமளித்துள்ள உறுப்பினர்களினுள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

(3) பேரவையின் கூட்டமொன்று, ஒன்றில் -

(அ) கூட்டநடப்பெண்ணாக அமைகின்ற எண்ணிக்கையினரான உறுப்பினர்கள் கூட்டத்துக்கு நியமிக்கப்பட்ட இடத்திலும், தேதியிலும், நேரத்திலும் கூடியிருப்பதன் மூலம் நடாத்தப்படலாம் அல்லது

(ஆ) கட்புல-செவிப்புல இணைப்பின்மூலம் நடாத்தப்படலாம்; இதன்மூலம், பங்குபற்று கின்றவர்களும் கூட்டநடப்பெண் ஒன்றாக அமைகின்றவர்களுமான எல்லா உறுப்பினர்களும் கூட்டம் நடைபெறும்வரை பங்கு பற்றுகின்ற ஒவ்வோர் உறுப்பினரையும் ஒரேநேரத்தில் காணமுடியும் மற்றும் கேட்கமுடியும்.

(4) பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமூகமளித்துள்ள உறுப்பினர்களுள் பெரும்பான்மையின் வாக்கினால் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், தவிசாளர், அவரது வாக்குடன் அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, பேரவையின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறையைப் பேரவை ஒழுங்குபடுத்தலாம்.

பேரவையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் ஏதேனும் வெற்றிடம் காரணமாகச் செல்லுபடியற்றனவாகக் கருதப்படுதலாகாது

**12.** பேரவையானது, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடமிருப்பினும் செயலாற்றலாமென்பதுடன் பேரவையின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பதன்காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரொருவரை நியமிப்பதில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக இருத்தலோ அல்லது இருப்பதாகக் கருதப்படுதலோ ஆகாது.

பேரவையின் உறுப்பினர் களுக்கான ஊதியம்

**13.** பேரவையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

அலுவலகத்தின் இலச்சினையும் குறிவும் கொடியும்

**14.** (1) அலுவலகத்தின் இலச்சினை, பேரவை காலத்துக்காலம் முடிவுசெய்யக்கூடிய அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) அலுவலகத்தின் இலச்சினை பேரவையினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) அலுவலகத்தின் இலச்சினை, பேரவையின் வலுவளிப்புடன் தவிரவும் பேரவையின் தவிசாளரினதும் இன்னுமோர் உறுப்பினரினதும் சமுகத்திலன்றியும் ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருநதனர் என்பதற்கத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்ப மிடுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அலுவலகத்தின் இலச்சினை ஏதேனும் சாதனத்துக்கு அல்லது ஆவணத்துக்குப் பொறிக்கப்படும் நேரத்தின் போது தவிசாளர் சமுகமளிப்பதற்கு இயலாதவராக உள்ளவிடத்து, அதற்கெனத் தவிசாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட பேரவையின் வேறெவரேனும் உறுப்பினர், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாட்டுக்கிணங்க அத்தகைய சாதனத்தை அல்லது ஆவணத்தைக் கையொப்பமிடுவதற்குத் தகுதிவாய்ந்தவராதல் வேண்டும்.

(4) அலுவலகத்தின் இலச்சினை எந்தச் சாதனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றை அலுவலகம் பேணுதல் வேண்டும்.

(5) அலுவலகத்தின் பயன்பாட்டிற்கெனப் பிரத்தியோகமான வொரு குறிவு இருத்தல் வேண்டும்.

(6) அலுவலகத்தின் அடையாளத்தைப் பேணுவதற்குக் கொடியொன்று இருத்தல் வேண்டும்.

(7) இச்சட்டத்தின்கீழ் அலுவலகத்தின் இலச்சினையை, குறிவை அல்லது கொடியை அறிந்துகொண்டு அல்லது வேண்டுமென்று துர்ப்பிரயோகம் செய்கின்ற ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

## பாகம் III

## தேசிய நீரளவையாளரும் அலுவலகத்தின் பணியாட்டொகுதியினரும்

*அலுவலகத்தின் தேசிய நீரளவையாளரை நியமித்தல்*

**15.** (1) அமைச்சரின் கலந்தாலோசனையுடன் பேரவையினால் நியமிக்கப்பட்ட அலுவலகத்தின் தேசிய நீரளவையாளரொருவர் இருத்தல் வேண்டும்.

(2) தேசிய நீரளவையாளராக நியமிக்கப்பட்ட ஆள் -

(அ) இலங்கைப் பிரசையொருவராகவிருத்தல் வேண்டும்;

(ஆ) உடல்ரீதியிலும் உளரீதியிலும் தகுதியுடையவராகவிருத்தல் வேண்டும்;

(இ) (i) நீரியல்சார் அளவையில் உயர்தொழிற்சார் செயற்பாடுகளிலும் ;

(ii) நீரியல்சார் கருத்திட்ட முகாமையிலும்; அத்துடன்

(iii) கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலையும் நன்றாக விளங்கிக் கொள்ளுதலிலும்,

ஆகக்குறைந்தது பதினைந்தாண்டு தகைமைக்குப் பின்னரான அனுபவத்தையேனும் கொண்ட நீரளவைசார் அளவையாளராக இருத்தல் வேண்டும்.

(ஈ) நியமனத் தேதியன்றுள்ளவாறு ஐம்பத்தைந்து வயதுக்கு மேற்படாதவராகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(உ) தகுதிவாய்ந்தவராகவும், உயர் ஒழுக்க நேர்மையையும், நன்மதிப்பையும் கொண்டிருப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

(3) தேசிய நீரளவையாளர், இறப்பின்மூலம், சட்ட நடைமுறையின்மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, மூன்றாண்டுக் காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, தொடர்ச்சியானவையாயினுஞ்சரி அல்லது வேறுவகையானவையாயினுஞ்சரி, எவையேனும் மூன்று பதவிக்காலங்களின் அதிகபட்சக் காலப் பகுதிக்கமைய மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(4) தேசிய நீரளவையாளர், பேரவையின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கமைய, -

(அ) பணியாட்டொகுதியினரின் நிருவாகமும் கட்டுப்பாடு முட்பட அலுவலகத்தின் நாளாந்த அலுவல்களின் நிருவாகத்தினது நடாத்துகை பொறுப்பிக்கப்பட்டவராதல் வேண்டும்;

(ஆ) பேரவையின் எல்லா முடிபுகளினதும் நிறைவேற்றுகைக்குப் பொறுப்பாதல் வேண்டும்; அத்துடன்

(இ) பேரவையினால் அவருக்குக் குறித்தளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணிகளையும் நிறைவேற்றுதல் வேண்டும்.

(5) தேசிய நீரளவையாளர், பேரவையின் செயலாளராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் சமுக மாயிருந்து உரையாற்றுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும், ஆனால் அத்தகைய கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடைய வராதலாகாது.

(6) தேசிய நீரளவையாளர், பேரவையின் அங்கீகாரத்துடன், (4) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அவரது பணிகளுள் எவற்றையும் அலுவலகத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு எழுத்தில் கையளிப்பது அவசியமென அவர் கருது மிடத்தெல்லாம் அவ்வாறு செய்யலாமென்பதுடன் அத்தகைய ஏதேனும் பணி கையளிக்கப்படுகின்ற அலுவலர் அல்லது ஊழியர், தேசிய நீரளவையாளரின் பணிப்புகளுக்கமைய அவற்றை நிறை வேற்றுதலும் வேண்டும்.

(7) பேரவையானது பின்வரும் சந்தர்ப்பங்களில் தேசிய நீரளவை யாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம்:-

(அ) அவரது கடமைகளைப் புரிவதற்கு அவர் நிரந்தரமாக இயலாதவராக வந்தால்;

(ஆ) மோசடியான அல்லது சட்டவிரோதமான பண்பினதாக இருப்பதான அல்லது அலுவலகத்தின் அக்கறைகளுக்குப் பங்கம் விளைவிக்கின்ற ஏதேனும் செயலை அவர் புரிந்திருந்தால்; அல்லது

(இ) பேரவையினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகத் தவறியிருந்தால்.

(8) தேசிய நீரளவையாளருக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக் கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப் படுதல் வேண்டும்.

**16.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அலுவலகமானது, அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் வினைத் திறனான பிரயோகம், புரிகை மற்றும் நிறைவேற்றுகை என்பவற் றுக்காக அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களை யும் ஊழியர்களையும் தொழிலுக்கமர்த்தலாம் அல்லது நியமிக்க லாம்.

(2) பேரவையானது, சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரு வனவற்றுக்கான தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலகத் தின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள்மீது ஒழுக் காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் அவர் களைப் பதவியிலிருந்து நீக்குதலும்;

(ஆ) (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலகத் தின் அலுவலர்களினதும் ஊழியர்களினதும் சேவை நியதிநிபந்தனைகளைத் தீர்மானித்தல்; அத்துடன்

(இ) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அத்தகைய அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் எந்த வீதங்களில் ஊதியமளிக் கப்படவேண்டுமோ அந்த வீதங்களை நிர்ணயித்தல்.

(3) அலுவலகத்தின் எல்லா அலுவலர்களும் மற்றும் ஊழியர் களும், தொழிலுக்கமர்த்தப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள், அவர்களின் கிட்டிய உறவினர்களின் அக்கறையுட்பட அலுவலகத் தின் அலுவல்களும் கொடுக்கல்வாங்கல்களும் தொடர்பில் அல்லது அத்தகைய அலுவலர் அல்லது ஊழியர் எந்தத் தொழில் ஈடுபாட்டில் கணிசமானளவிலான அக்கறையைக் கொண்டுள் ளாரோ அந்தத் தொழில் ஈடுபாடுகளின் அலுவல்களும் கொடுக்கல் வாங்கல்களும் தொடர்பில் அவர்களின் தனிப்பட்ட நேரடியான அல்லது நேரடியானதல்லாத அக்கறையை அலுவலகத்துக்கு எழுத்தில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

(4) அலுவலகமானது, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் தேசிய நீரளவையாளரினதும் அதன் அலுவலர்களினதும் நன்மைக்காக ஓய்வூதிய மற்றும் சகாய நிதியங்களையும் திட்டங்களையும் தாபித்து ஒழுங்குபடுத்தலாமென்பதுடன் அத்தகைய ஏதேனும் நிதியத்துக்கு அல்லது திட்டத்துக்கு உதவுதொகைகளையும் செலுத்தலாம்.

(5) அலுவலகமானது, அதன் அலுவலர்களினதும் ஊழியர்களினதும் பயிற்சியை ஊக்குவித்தலும் அதற்கு அனுசரணையளித்தலும் வேண்டுமென்பதுடன் இந்நோக்கத்துக்காக, அலுவலகத்தினால் தீர்மானிக்கப்பட்டவாறு எண்பிக்கப்பட்ட திறமையைக் கொண்டுள்ள அலுவலகத்தின் அலுவலர்களினதும் ஊழியர்களினதும் இலங்கையிலான அல்லது வெளிநாட்டிலான கற்கைக்கான ஆகுசெலவுகளைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு அலுவலகத்துக்கு அதிகாரமளிக்கப்படுதலும் வேண்டும்.

(6) அலுவலகத்தின் அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் ஏற்புடையதற்பாலனவாக இருக்கவேண்டிய நடத்தைக்கோவையொன்றை அலுவலகமானது தாபித்தல் வேண்டும்.

(7) ஆளொருவர் பின்வருமாறு இருந்துள்ளவிடத்து, அலுவலகமானது அத்தகைய ஆளை அலுவலகத்தின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கலாகாது:-

(அ) ஒரு நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் பாரதூரமான துர்நடத்தைக்கு முன்னர் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளவிடத்து அல்லது ஓர் ஒழுங்குபடுத்தும் குழுவினாலான ஒழுக்காற்று நடவடிக்கையொன்றுக்கு அமைந்தவராக இருந்துள்ளவிடத்து;

(ஆ) பதவியிலிருந்து முன்னர் நீக்கப்பட்டுள்ளவிடத்து; அல்லது

(இ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளின் ஏற்பாடுகளினது மீறுகையொன்றைப் புரிந்துள்ளவிடத்து.

(8) அலுவலகத்தின் கோரிக்கையின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடனும், அலுவலகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அலுவலகத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப் படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(9) பகிரங்கசேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அலுவலகத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(10) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அலுவலகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(11) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ள எவரேனுமாளை அலுவலகம் தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் அலுவலகத்துக்கான ஏதேனும் சேவைக் காலப்பகுதி, அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(12) அலுவலகத்தின் கோரிக்கையின்பேரில் இலங்கைத் தரைப் படையின், இலங்கைக் கடற்படையின் அல்லது இலங்கை வான்படையின் எவரேனும் அலுவலர், விடயத்துக்கேற்ப, தரைப்படை ஏவுநரின். கடற்படை ஏவுநரின் அல்லது வான்படை ஏவுநரின் எழுத்திலான வலுவளிப்புடன், விடயத்துக்கேற்ப, (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின், (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் மற்றும் (359 ஆம் அத்தியாயமான)

வான்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அலுவலகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அலுவலகத்துக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம்.

(13) அலுவலகமொன்று அத்தகைய அலுவலரின் அல்லது ஊழியரின் சம்மதத்துடன் இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள வேறு அரச நிறுவனங்களுக்கு அதன் அலுவலர்களை அல்லது ஊழியர்களை, அத்தகைய நிறுவனத்துக்கும் அல்லது அதிகாரசபைக்கும் அலுவலகத்துக்கும் இடையே உடன்பட்டுக் கொள்ளப்பட்ட ஒரு வேலை தொடர்பில் அலுவலகத்தினால் தீர்மானிக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு மாற்றுச்சேவைக்கு முன்மொழியலாம். மாற்றுச்சேவைக் காலப்பகுதி அலுவலகத்துக்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

## நீரளவைசார் அளவையாளரர்களாக அல்லது கப்பல் துறைசார்ந்த நிலப்படவியலாளர்களாகப் பதிவுசெய்தல்

*நீரளவைசார் அளவையாளர்கள் அல்லது கப்பல் துறை சார்ந்த நிலப்படவியலாளர்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்தல் வேண்டும்*

**17.** (1) ஆளொருவர் நீரளவைசார் அளவையாளராக அல்லது கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலளாராக அத்தகைய ஆள் இச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்பட்டாலொழிய, தொழில்புரிதலாகாது:

ஆயின், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று இலங்கையின் உள்ளக நீர்பரப்புகளின் மீதல்லாது நீரளவைசார் அளவை அல்லது கப்பல்துறைசார்ந்த நிலப்படவியல் என்ற தொழிலில் ஏற்பட்டுள்ள எவரேனும் நீரளவைசார் அளவையாளர் அல்லது கப்பல்துறை சார்ந்த நிலப்படவியலர், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இரண்டாண்டுகளினுள் 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தன்னைப் பதிவுசெய்துகொள்ளுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறும் எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்

கத்தின்பின்னர் குற்றத் தீர்க்கப்படுவதன்மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

ஒரு நீரளவைசார் அளவையாளராக அல்லது ஒரு கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலாளராக பதிவு செய்யப்படுவதற்கான விண்ணப்பம்

**18.** (1) ஒரு நீரளவைசார் அளவையாளராக அல்லது ஒரு கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலராகத் தொழில்புரிவதற்கு விரும்புகின்ற ஆளொருவர், பதிவுசெய்யப்படுவதற்காக அலுவலகத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பகாரர் சர்வதேச நியமங்களுக்கு இணங்கியொழுக விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்று பொருளளவில் ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான வொரு படிவத்திலிருத்தலும் விதித்துரைக்கப்பட்டவொரு கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(4) அலுவலகமானது, அது குறித்துரைக்கப்பட்டவாறு விண்ணப்பமொன்று சம்பந்தமாக மேலதிகத் தகவல்களைக் கொடுத்துதவும்படி விண்ணப்பக்காரரொருவரை தேவைப்படுத்தலாம்.

(5) ஒரு விண்ணப்பத்திற்கு ஆதரவாகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களைச் சரிபார்த்தல் சம்பந்தமாக உறப்பட்ட ஆகுசெலவை விண்ணப்பகாரர் ஒருவர் பொறுத்தல் வேண்டும்.

(6) ஓராம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், அலுவலகமானது, விண்ணப்பத்தில் அடங்கியுள்ள கருமங்களைக் கவனத்துட்கொண்டதன்மீது, இச்சட்டத்தின் ஏற்பாட்டுக்கும் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கும் அமைய விண்ணப்பகாரரை ஒன்றில் ஒரு நீரளவைசார் அளவையாளராக அல்லது ஒரு கப்பல்துறைசார்ந்த

நிலப்படவியலாரகப் பதிவுசெய்வதற்கு முடிபுசெய்தல் வேண்டும் அல்லது அதனால் பதிவுசெய்யப்படவேண்டிய காரணங்களுக்காக ஒரு நீரளவைசார் அளவையாளராக அல்லது ஒரு கப்பல்துறை சார்ந்த நிலபடவியலராகப் பதிவுசெய்வதற்கு மறுத்தல் வேண்டும்.

(7) அலுவலகமானது அதன் முடிபை எழுத்தில் விண்ணப்ப காரருக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன் பதிவுசெய்வதற்கான மறுப்பின் விடயத்தில், சொல்லப்பட்ட முடிபை அறிவித்த தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் அதற்கான அதன் காரணங்களைக் குறிப்பிடுதலும் வேண்டும்.

(8) இப்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு நீரளவைசார் அளவையாளருக்கு அல்லது ஒரு கப்பல்துறைசார்ந்த நிலப்பட வியலருக்கு (இதனகத்துப்பின்னர் "பதிவுச் சான்றிதழ்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) விதித்துரைக்கப்படக்கூடியவாறான படிவத்திலும் முறையிலும் முறையான துறையிலான பதிவுச் சான்றிதழொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(9) பதிவுச் சான்றிதழானது, அத்தகைய பதிவு எந்த நியதி நிபந்தனைகளுக்கமைய வழங்கப்பட்டுள்ளதோ அத்தகைய அந்த நியதிநிபந்தனைகளை உள்ளடக்குதல் வேண்டும்.

ஒரு பதிவின் கால எல்லை

**19.** (1) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச் சான்றித ழொன்று முன்னதாக இரத்துச் செய்யப்படாலொழிய, பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதிக் குச் செல்லுப்படியுடையதாதல் வேண்டும்.

(2) பதினெட்டாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்டவொரு பதிவுச் சான்றிதழை வைத்திருப்பவர், சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை அல்லது அத்தகைய பதிவுச் சான்றிதழின் நியதிநிபந்தனைகளை மீறியுள்ளதென அலுவலகமானது திருப்திபடின், அது அப்பதிவுச் சான்றிதழை இல்லாதாக்கலாம்.

பதிவுச் சான்றிதழைப் புதுப்பித்தல்

**20.** பதினெட்டாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழொன்று, அப்பதிவுச் சான்றிதழ் முடிவுறுமுன்னர் முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் விதித்துரைக்கப்படக் கூடியவாறானவொரு படிவத்தில் விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஒரு கட்டணத் துடன்சேர்த்து அலுவலகத்துக்கு அதற்கென விண்ணப்பமொன்று செய்யப்படுவதன்மீது புதுப்பிக்கப்படற்பாலதாதல் வேண்டும்:

ஆயின், பகிரங்க அலுவலரொருவராகவுள்ள எவரேனும் நீரளவைசார் அளவையாளர் அல்லது கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலர், அத்தகைய அலுவலர் ஒரு பகிரங்க அலுவலராகச் சேவையாற்றும் காலம்வரை இப்பிரிவின்கீழ் பதிவைப் புதுப்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.

பதிவுச் சான்றிதழொன்றைப் பதிவுசெய்வதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுத்தல்

**21.** (1) பதிவுச் சான்றிதலொன்றைப் பதிவுசெய்வதற்காக அல்லது புதுப்பிப்பதற்காக விண்ணப்பமொன்று செய்யப்படுமிடத்து, அலுவலகமானது பின்வரும் ஏதுக்களுள் ஏதேனுமொன்றின்மீது பதிவுச் சான்றிதழைப் பதிவுசெய்வதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுக்கலாம்:-

(அ) அதற்கென ஆக்கப்பட்ட விதிகளுக்கு இணங்கியொழுகாமை;

(ஆ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறுகின்றமை;

(இ) விண்ணப்பகாரரினால் அலுவலகத்துக்குக் கொடுத்துதவப்பட்ட தகவல் அல்லது ஆவணங்கள் பொய்யானது, பிழைவழியுய்க்கின்றது அல்லது முக்கியமாக விட்டுவிடுகைகள் உள்ளமை; அல்லது

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளமை.

(2) அலுவலகமானது, விண்ணப்பகாரருக்கு கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றைக் கொடுக்காமல் பதிவுச் சான்றிதழைப் பதிவுசெய்வதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுத்தலாகாது.

சுருக்கீடு செய்யப்பட்ட பதவிப் பெயர்களின் பாவனை

**22.** (1) பதினெட்டாம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்படுகின்ற, விடயத்துக்கேற்ப, ஒவ்வொரு நீரளவைசார் அளவையாளரும் அல்லது கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலர் ஒருவரும், அத்தகைய ஆள்-

(அ) நீரளவைசார் அளவையாளராகவிருப்பின், “HyS” என்ற சுருக்கீடுசெய்யப்பட்ட பதவிப் பெயரையும்; அத்துடன்

(ஆ) கப்பல்துறைசார்ந்த நிலற்ப்படவியலராகவிருப்பின், “NauC” என்ற சுருக்கீடுசெய்யப்பட்ட பதவிப் பெயரையும்,

பயன்படுத்துவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஆளொருவர் இச்சட்டத்தின் எற்பாடுகளின்கீழ் நீரளவைசார் அளவையாளராக அல்லது கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலராகப் பதிவுசெய்யப்பட்டாலொழிய, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் சுருக்கீடு செய்யப்பட்ட பதவிப்பெயரைப் பயன்படுத்துதலாகாது.

ஒரு பதிவின் இல்லாதாக்குகை அல்லது இடைநிறுத்துகை

**23.** (1) எவரேனும் நீரளவைசார் அளவையாளர் அல்லது ஒரு கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலர்-

(அ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது விதியின் ஏற்பாடுகளை மீறியுள்ளாரென;

(ஆ) 18 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழின் ஏதேனும் நியதியை அல்லது நிபந்தனையை மீறியுள்ளாரென; அல்லது

(இ) 26 ஆம் பிரிவின்கீழ் அலுவலகத்தினால் தாபிக்கப்பட்ட முறைப்பாடுகளைத் தீர்த்து வைத்தற் குழுவினால் நடத்தப்பட்டவொரு விசாரணையின் பின்னர், விதித்துரைக்கப்பட்ட ஒரு செயலுக்கு அல்லது உயர்தொழிற்சார் துர்நடத்தைக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளாரென,

அலுவலகம் திருப்பதிப்படின், அலுவலகமானது, 18 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அத்தகைய நீரளவைசார் அளவையாளரின் அல்லது கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலரின் பதிவை இடைநிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நீரளவைசார் அளவையாளருக்கு அல்லது கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலருக்கு அத்தகைய இடைநிறுத்துகைசார்ந்த அறிவிப்பு உடனடியாக வழங்கப்படுவதனைச் செய்வித்தலும் வேண்டும்.

(2) அத்தகைய ஏதேனும் அறிவிதத்தல், அலுவலகத்தின் முடிபு எந்த ஏதுக்களின் அடிப்படையின் மீதானவையோ அந்த ஏதுக்களைக் குறித்துரைத்தல் வேண்டுமென்பதுடன் அறிவித்தல் பெறப்பட்ட தேதியிலிருந்து தொடங்குகின்ற ஒருமாதகாலப் பகுதியினுள் அத்தகைய நீரளவைசார் அளவையாளர் அல்லது கப்பல் துறைசார்ந்த நிலப்படவியலர், பதிவு ஏன் இல்லாதாக்கப்படுதலாகாது என்பதுபற்றிய ஏதேனும் காரணத்தை எழுத்தில் அலுவலகத்துக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதனைச் சுட்டிக்காட்டுதலும் வேண்டும்.

(3) விடயத்துக்கேற்ப அத்தகைய நீரளவைசார் அளவையாளர் அல்லது கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலர் ஒருமாதகாலப் பகுதியினுள் காரணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுமிடத்து அல்லது நீரளவைசார் அளவையாளரினால் அல்லது கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலரினால் கொடுக்கப்பட்ட காரணங்களுடன் அலுவலகம் திருப்திப்படாத விடத்து, விடயத்துக்கேற்ப, உரிய விசாரணையின் பின்னர் அத்தகைய நீரளவைசார் அளவையாளரின் அல்லது கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலரின் பதிவை அலுவலகம் இல்லாதொழிக்கலாமென்பதுடன் அத்தகைய இல்லாதாக்குகைப்பற்றி எழுத்தில் அத்தகைய ஆளுக்கு அறிவிக்கலாம்.

(4) எவரேனும் நீரளவைசார் அளவையாளர் அல்லது ஒரு கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, 18 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ்–

(அ) குற்றத்தீர்ப்புக் கெதிராக மேன்முறையீடெதுவும் செய்யப் படாதவிடத்து இல்லாதாக்கப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) இயைபான எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி மேன்முறையீடொன்று செய்யப்படுமிடத்து, மேன் முறையீடானது எந்த மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்படுகின்றதோ அந்த மேன்முறையீட்டு நீதிமன் றத்தின் முடிபு கூறப்படும்வரை இடைநிறுத்தப்படுதல் வேண்டும்.

(5) ஒரு நீரளவைசார் அளவையாளரின் அல்லது ஒரு கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலரின் பதிவு இல்லா தாக்கப்படுமிடத்து, அத்தகைய ஆளின் பெயர் இச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின்கீழ் வைத்திருக்கப்பட்ட இடாப்புக்களிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ் எந்த ஆளின் பதிவு இல்லாதாக்கப் படுகின்றதோ அந்த எவரேனுமாள் பதினான்கு நாட்களினுள் அவரது முறையான பதிவுச் சான்றிதழை அலுவகத்துக்குக் கையளித்தல் வேண்டும்.

## பாகம் V

## மேன்முறையீடுகள்

மேன் முறையீடுகள்

**24.** (1) இருபத்திமூன்றாம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழல்லாது அலுவலகத்தின் முடிபினால் இன்னலுறும் எவரேனு மாள், அத்தகைய முடிபு அறிவிக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள் 25 ஆம் பிரிவின்கீழ் இந்நோக்கத்துக்காக அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) மேன்முறையீட்டுச் சபை, இயைபான எல்லாக் காரணிகளையும் கவனத்துட்கொண்டபின்னரும் தோதாகவும் நியாயமாகவும் இருக்குமிடத்து–

(அ) மேன்முறையீட்டை அனுமதித்து அலுவலகத்தின் முடிபை வேறுபடுத்தலாம் அல்லது அத்தகைய முடிபை உறுதிப் படுத்தலாம்; அல்லது

(ஆ) மேன்முறையீட்டுக்கு அனுமதிக்கலாம்.

**25.** (1) அமைச்சர் மேன்முறையீட்டுச் சபையொன்றை நியமித்தல் வேண்டும்; அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:– மேன் முறையீட்டு சபை

(அ) ஆகக்குறைந்தது ஐந்தாண்டு அனுபவ மட்டத்துடனேனும் பதிவுசெய்யப்பட்ட ஒரு நீரளவைசார் அளவையாளர் மற்றும் ஒரு கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலர்;

(ஆ) இயைபான துறையில் ஆகக்குறைந்தது பத்தாண்டு அனுபவத்துடனேனும் கடல்சார் சட்டம் என்ற துறையில் தகைமைபெற்ற ஒரு சட்டத்தரணி; அத்துடன்

(இ) இலங்கை நிருவாகச் சேவையின் I ஆம் வகுப்பைச்சேர்ந்த அலுவலர்.

(2) மேன்முறையீட்டுச் சபையின் உறுப்பினர்களை நியமிக்கும் போது அமைச்சர் அலுவலகத்தைக் கலந்தாலோசிக்கலாம்.

(3) மேன்முறையீட்டுச் சபையின் உறுப்பினர்கள் நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுக்காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையோராதலும் வேண்டும்.

(4) மேன்முறையீட்டுச் சபையின் கூட்டங்களும் அலுவல்களும் எம்முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டுமோ அம்முறையை விதித்துரைத்து அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(5) மேன்முறையீட்டுச் சபை அதன் முடிபை அலுவலகத்துக்கு அறிவித்தல் வேண்டும்.

(6) மேன்முறையீட்டுச் சபையின் முடிபைப் பெற்றதன்மேல், அலுவலகமானது அத்தகைய முடிபை உடனடியாக மேன்முறையீட்டாளருக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன் மேன்முறையீட்டுச் சபையின் முடிபுக்கிணங்கச் செயலாற்றுதலும் வேண்டும்.

(7) மேன்முறையீட்டுச் சபையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

*முறைப்பாடுகளைத் தீர்த்து வைத்தற் குழுவினாலான விசாரணை*

**26.** (1) (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) உயர்தொழில்சார் துர்நடத்தை அல்லது இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளின் ஏதேனும் ஏற்பாட்டின் மீறுகை தொடர்பாக எவரேனுமாளினாலான முறைப்பாடுகளைக் கேட்பதற்கும் அலுவலகத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய அலுவலர்களைக் கொண்டதுமான முறைப்பாடுகளைத் தீர்த்துவைத்தற் குழுவொன்றை அலுவலகமானது தாபித்தல் வேண்டும்.

(2) குழுவானது அவசியமானவையென அல்லது உசிதமானவையென கருதப்படக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளை நடாத்தலாமென்பதுடன் அத்தகைய நோக்கத்துக்காகச் சான்றளிப்பதற்கு அல்லது அத்தகைய விசாரணைகளின் நோக்கத்துக்காகத் தேவைப்படுகின்றவாறாக எவரேனும் ஆளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் புத்தகத்தை அல்லது ஆவணத்தைக் காண்பிப்பதற்குக் குழுவுக்குமுன்னர் தோன்றும்படி அத்தகைய ஆளை அழைத்துக்கோரலாம்.

(3) அலுவலகமானது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளின் மூலம் அத்தகைய முறைப்பாடுகளையும் அவற்றின் இடைநேர் விளைவான எல்லாக் கருமங்களையும் கையாள்வதற்காகத் தோதான நடவடிக்கைமுறையொன்றைத் தாபித்தல் வேண்டும்.

(4) குழுவானது, ஆளொருவரினால் செய்யப்பட்ட ஏதேனும் எழுத்திலான முறைப்பாட்டைப் பெற்றதன்மீது, எந்த நீரளவைசார் அளவையாளருக்கெதிராக அல்லது கப்பல்துறைசார்ந்த நிலப்பட வியலருக்கெதிராக முறைப்பாடு செய்யப்படுகின்றதோ அந்த நீரளவைசார் அளவையாளரினால் அல்லது கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலரினால் உயர்தொழில்சார் துர்நடத்தையின் ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட செயல் புரியப்பட்டுள்ளதாவென்பதைக் கண்டுபிடிப்பதற்கு அத்தகைய குழுவின்முன்னர் காண்பிக்கப்பட்ட சான்றைப் பரிசோதனைசெய்யலாம்.

(5) ஆளொருவர் இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியின் அல்லது விதியின் ஏதேனும் ஏற்பாட்டை மீறியுள்ளாரெனக் குழுவானது கண்டுபிடிக்குமிடத்து, குழு கண்டுபிடிப்பை விதப்புரையொன்றுடன் அலுவலகத்துக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அலுவலகமானது ஒன்றில் அத் தகைய விதப்புரைக்குப் பயன்கொடுப்பதற்கு அல்லது உசிதமான தென அது கருதக்கூடியவாறான வேறேதேனும் நடவடிக்கையை எடுப்பதற்குத் தற்றுணியுடையதாதலும் வேண்டும்.

(6) கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றை ஆளுக்கு அளிக்காமல் அலுவலகமானது இப்பிரிவின்கீழான ஏதேனும் நடவடிக்கையை எடுத்தலாகாது.

## பாகம் VI

## நிதி

**27.** (1) (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடுசெய்யப் படும்) அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அலுவலகத்தின் நிதியம்

(2) பின்வருவன நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) அலுவலகத்தின் பாவனைக்காகப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் விலக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அலுவலகம் அதன் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் பெறப்படக் கூடியவாறான இத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்; அத்துடன்

(இ) இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி ஏதேனும் மூலத்திலிருந்து வருமானம், கட்டணங்கள், விதிப்பனவுகள், மானியக் கொடைகள் அல்லது நன்கொடைகள் எவ்வகையாக அலுவலகத்திலிருந்து பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்:

ஆயின், அலுவலகத்துக்கு அளிக்கப்பட்ட மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பில், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டுவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தை அலுவலகம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(3) பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) அலுவலகம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களை யும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இதன்கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

*நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்*

**28.** (1) அலுவலக்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) பேரவையானது அலுவலகத்தின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறெல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குப்புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளினது கணக்காய்வு தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், அலுவலகத்தின் கணக்குகளினது கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) பேரவையானது, கணக்காய்வுசெய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றைக் கணக்காய்வாளரின் அறிக்கையுடன், அத்தகைய அறிக்கை எந்நிதியாண்டு தொடர்பானதோ அந்நிதியாண்டின் முடிவிலிருந்து ஐந்து மாதங்களினுள் அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அமைச்சர் அத்தகைய கூற்றையும் அறிக்கையையும், அவை கிடைக்கப்பெற்றதிலிருந்து இரண்டு மாதங்களினுள் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும்.

## பாகம் VII

## பொது

பேரவையின் தத்துவங்களைக் கையளித்தல்

**29.** (1) பேரவையானது எழுத்திலும் அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும் 16 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளின்கீழ் பேரவைக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் தேசிய நீரளவைசார் அளவையாளருக்குக் கையளிக்கலாமென்பதுடன் தேசிய நீரளவைசார் பேரவையின் பெயரிலும் அதன் சார்பிலும் அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) பேரவையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறாயினும், அவ்வாறு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை தானே பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம் என்பதுடன் எந்நேரத்திலும் அத்தகைய ஏதேனும் கையளிப்பை இல்லாதொழிக்கலாம்.

இச்சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான பாதுகாப்பு

**30.** தேசிய நீரளவைசார் அலுவலகத்தின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் அல்லது பேரவையின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக, இச்சட்டத்தின்கீழ் அல்லது விடயத்துக்கேற்ப, அலுவலகத்தின் அல்லது பேரவையின் பணிப்புகளின்மீது அவரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவர் நல்லெண்ணத்துடன் செயலாற்றினாரெனவும் உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும், நியாயமான கவனத்தையும், திறனையும் தான் பிரயோகித்தாரெனவும் எண்பித்தால், குடியியல் அல்லது குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது.

இரகசியத்தைப் பேணுவதற்கான கடமை

**31.** (1) பேரவையின் ஒவ்வோர் உறுப்பினரும், தேசிய நீரளவைசார் அளவையாளரும், அலுவலகத்தின் அலுவலரும் அல்லது ஊழியரும் அவரது பதவிக்குரிய கடமைகளை ஏற்குமுன்னர், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காகத்தவிர, இச்சட்டத்தின்கீழ் அவரது தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அவரினாற் பெறப்பட்ட அல்லது அவரது அறிவுக்கு வருகின்ற ஏதேனும் தகவலைத் தான் வெளிவிடமாட்டாரென வெளிப்படுத்துகையொன்றைக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

தரவுத் தளம்

**32.** (1) அலுவலகத்தினால் சேகரிக்கப்பட்ட எல்லா நீரளவைசார் அளவைத் தரவுகள், கடல்சார் தரவுகள் மற்றும் நீரியல் இடஞ்சார்ந்த தரவுகள்பற்றிய தரவுத்தளமொன்றை அலுவலகம் உருவாக்குதலும், முகாமைசெய்தலும், பேணுதலும் வேண்டும்.

(2) அலுவலகமானது அதன் எல்லாத் தரவுத்தளங்களினதும் தரவுகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான தொழினுட்ப இடர்காப்புகளுட்பட அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

இணைப்பிரதிகள

**33.** (1) முற்போந்த மாதத்தின்போது ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட நீரளவைசார் அளவையாளரினாலும் அல்லது கப்பற்றுறைசார்ந்த நிலப்படவியலாளரினாலும் ஒரு கப்பல்துறைசார்ந்த விளக்கப்படங்களினதும் கப்பல் துறைசார்ந்த வெளியீடுகளினதும் இணைப்பிரதிகள், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் இணைப்பிரதியிலான நிரலொன்றுடன் சேர்த்து ஒவ்வொரு மாதத்தினதும் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர் அலுவலகத்துக்குச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(2) அலுவலகமானது அத்தகைய இணைப்பிரதிகளை விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் பேணுதல் வேண்டும்.

(3) ஏதேனும் கப்பல்துறைசார்ந்த விளைக்கப்படம் அல்லது செவ்வையான தாள் ஏதேனும் மாதத்தில் ஒரு நீரளவைசார் அளவையாளரினால் அல்லது ஒரு கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலாளரினால் தயாரிக்கப்படாதவிடத்து, அத்தகைய ஆள் இலங்கையில் இராதிருந்தாலொழிய, அடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர் அவர் அம்மாதத்துக்கான பூச்சிய நிரலொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(4) இணைப்பிரதிகளைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற ஒரு நீரளவைசார் அளவையாளர் அல்லது ஒரு கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலாளர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உயர்தொழிற்சார் துர்நடத்தையொன்றைப் புரிகின்றார்.

*கப்பல்துறை சார்ந்த விளக்கப் படங்கள் முதலியனவற்றின் மெய்யானதன்மை*

**34.** ஏதேனும் கப்பல்துறைசார்ந்த விளக்கப்படத்தின் அல்லது செவ்வையான தாளின் உண்மைப்பிரதியாகக் கருதப்படுவதும் தேசிய நீரளவையாளரினால் அல்லது அவரது சார்பில் செயலாற்றுகின்ற எவரேனும் அலுவலரினால் கையொப்பமிடப்பட்ட தாகக் கருதப்படுவதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்திற் கிணங்கத் தயாரிக்கப்பட்டதுமான அத்தகையவொரு கப்பல்துறை சார்ந்த விளக்கப்படம், செவ்வையான தாள் அல்லது வேறேதேனும் கப்பற்போக்குவரத்துசார் விளக்கப்படம் அல்லது ஆழ்வுமானத் தாள், எல்லா வழக்குகளிலும் எல்லா நோக்கங்களுக்காகவும் சான்றில் ஏல்தகவுடையனவாதல் வேண்டுமென்பதுடன் அவற்றின்கண் கூறப்பட்ட நிகழ்வுகளின் உண்மைபற்றி முதற்றோற்ற அளவிலான சான்றாக எடுக்கவும் படலாம்; அத்துடன் முரணாக எண்பிக்கப்படும்வரை அத்தகைய பிரதி உண்மையாகத் தேசிய நீரளவையாளரினால் அல்லது அவரது சார்பில் செயலாற்றுகின்ற அலுவலரினால் கையொப்பமிடப்பட்டது அல்லது மெய்யென்று உறுதிப்படுத்தப்பட்டது அல்லது அது ஓர் உண்மைப் பிரதியாக வுள்ளது அல்லது அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகள் செம்மை யானவை என எண்பிப்பது அவசியமாதலாகாது.

*நில அளவைக் குறியீடுகளுடன் தலையிடுதல்*

**35.** (1) நீரியல் நிலஅளவைகளைக் கட்டுப்படுத்துவற்காக அல்லது எல்லைகளை வரையறுப்பதற்காக அல்லது அபாயத்தை அடையாளங் காண்பதற்காக அல்லது இச்சட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட ஏதேனும் நிலஅளவையின் நோக்கத்துக்காக இடப்பட்டுள்ளதும் அல்லது நிறுவப்பட்டுள்ளதும் கடலில் அல்லது கரையோர இடப்பரப்பில் உள்ளதுமான ஏதேனும் குறியீட்டின் நிலையை அல்லது அதன்மீதுள்ள அடையாளங்களை, மிதவைகளை அல்லது கரைவிளக்குகளை அறிந்துகொண்டு அல்லது வேண்டு மென்று அகற்றுகின்ற, அழிக்கின்ற அல்லது மாற்றுகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றா ரென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்தக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாள், அத்தகைய ஆள் எந்தக் குற்றப்பணம் அல்லது மறியற்றண்டனை அல்லது இரண்டிற்கும் ஆளாகவுள்ளாரோ அந்தக் குற்றப்பணம் அல்லது மறியற்றண்டனை அல்லது இரண்டிற்கும் சேர்த்து மேலதிகமாக (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நில அளவைக் குறியீடுகளை, மிதவைகளை அல்லது கரைவிளக்குகளைப் பழுதுபார்த்தல், மாற்றீடுசெய்தல் அல்லது மீட்டெடுத்தல் தொடர்பில் அலுவலகத்தினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய ஆகுசெலவுகளுக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஏதேனும் இடத்தை அணுகுவதற்கான தத்துவம்

**36.** (1) இச்சட்டத்தின்கீழான தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கும், புரியும் மற்றும் நிறைவேற்றும் நோக்கத்துக்காகப் பின்வருவனவற்றை நடாத்துதல் அலுவலகத்துக்கு அல்லது அலுவலகத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்–

(அ) ஏதேனும் இடத்துக்கு, வளவுகளுக்கும், வாகனத்துக்கு, வானூர்திக்கு அல்லது ஒரு கலத்துக்கு அணுகுகையைக் கொண்டிருத்தல்;

(ஆ) நீரளவைசார் அளவையாளர் நோக்கத்துக்காக ஏதேனும் நிரந்தரமான வெளிச்சத்தை, அடிமட்டக் குறியை, குறிப்பீட்டுக் குறியை, அல்லது ஏதேனும் தற்காலிகக் கொடியை, சைகையை அல்லது வேறு குறியீட்டை இடுதல் அல்லது நிறுவுதல்; அத்துடன்

(இ) ஏதேனும் கரைவிளக்குக்கு, குறியீட்டுக்கு, முக்கோணப் புள்ளிக்கு, கொடிக்கு அல்லது சமிக்ஞைக்கு முட்டுக் கட்டையிடுகின்ற ஏதேனும் தாவரவினத்தை அல்லது விலங்கினத்தை வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அது தடைசெய்யப்பட்டிருந்தாலொழிய, அகற்றுதல்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக –

(அ) இடத்தின், வளவுகளின், வாகனத்தின், வானூர்தியின் அல்லது கலத்தின் சொந்தக்காரருக்கு, இருப்பாட்சியாளருக்கு அல்லது அதனை உடைமைகொண்டுள்ள ஆளுக்கு நியாயமான காலப்பகுதியினுள் எழுத்திலான முன்னறிவித்தல் கொடுக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) அலுவலகத்தினால் குறித்துரைக்கப்பட்ட முறையில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை நிறைவேற்றுகையில் சொந்தக்காரரின், இருப்பாட்சியாளரின் அல்லது உடைமைகொண்டுள்ள ஆளின் ஆதனத்துக்கு விளைவிக்கப்பட்ட ஏதேனும் சேதத்துக்காக அத்தகைய ஆளுக்கு மீளளிப்புச் செய்யப்படுதல் வேண்டும்; அல்லது

(இ) தேசியப் பந்தோபஸ்துக் காரணமாக அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாட்டின்கீழ் ஏதேனும் இடத்துக்கான, வளவுகளுக்கான, வாகனத்துக்கான, வானூர்திக்கான அல்லது கலத்துக்கான அணுகுகை மட்டுப்படுத்தப்படின் இயைபான அதிகாரியின் எழுத்திலான முன்னங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

*நீரளவைக் கப்பற்றொகுதியின் கலன்கள்*

**37.** இலங்கையின் நீர்ப்பரப்புகளில் நீரளவைக்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் கலனும் ஏதேனும் பொறிமுறை அல்லது பொறிமுறைசாராச் சாதனங்களும் அதற்கென ஆக்கப்படும் விதிகளுக்கிணங்க அலுவலகத்தினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறாக அலுவலகத்தினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

*அலுவலகத்தினால் இடாப்புக்கள் வைத்திருக்கப்படுதல் வேண்டும்*

**38.** அலுவலகமானது இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கிணங்க விதித்துரைக்கப்படவேண்டிய படிவத்திலும் முறையிலும் நீரளவைசார் அளவையாளர்களும் கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலர்களும் பற்றிய இடாப்புக்களைப் பேணுதல் வேண்டும்.

அசைவுள்ள, அசைவற்ற அரசகாணி அலுவலகத்துக்குக் கிடைக்கக்கூடிய தாக்கப்படுதல் வேண்டும்

**39.** (1) இச்சட்டத்தினது ஏற்பாடுகளின் நியதிகளின்படி அரசின் ஏதேனும் அசைவற்ற ஆதனம் அலுவலகத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படுமிடத்து, அத்தகைய நோக்கமானது, (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் எந்த நோக்கத்துக்காக அலுவலகத்துக் அத்தகைய ஆதனத்தின் ஒரு விசேட அளிப்பு அல்லது குத்தகை வழங்கப்பட வேண்டுமோ அந்த ஒரு நோக்கமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க அக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய நோக்கத்துக்காக அலுவலகத்துக்கு அத்தகைய ஆதனத்தின் ஒரு விசேட அளிப்புக்கு அல்லது குத்தகைக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) ஓர் அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் அசைவுள்ள ஆதனம் அலுவலகத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படுமிடத்து, அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பாவனையையும் அலுவலகத்துக்குக் கைமாற்றி அதற்குரித்தாக்கலாம்.

(3) ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்துடன் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்துடன் சம்பந்தப்பட்ட கட்டளை எதுவும், அத் திணைக்களம் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் எந்த அமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டதோ அந்த அமைச்சரின் ஒருப்பாட்டின்றி (2) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்படுதலாகாது.

எந்த மீறுகைகளுக்காகக் குறிப்பீட்ட எற்பாடுகள் எவையும் செய்யப்பட்டிருக்கவில்லையோ அந்த மீறுகைகளுக்கான தண்டங்கள்

**40.** எவரேனுமாள் இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது விதியின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுமிடத்தும் அத்தகைய மீறுகை தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் தண்டமெதுவும் குறித்துரைக்கப்பட்டிராதவிடத்தும், அத்தகைய ஆள் ஒரு நீதிவான் முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

குற்றவழக்குத் தொடர்பான ஏற்பாடுகள்

**41.** அலுவலகத்தினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர், இச்சட்டத்தின்கீழான தவறுகள் தொடர்பில் வழக்குநடவடிக்கைகளைத் தொடுக்கும் நோக்கத்துக்காக, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்பட ஒரு பகிரங்க சேவையாளரொருவராகவிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்துக்குட்பட அலுவலகம் ஓர் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்

**42.** அலுவலககமானது, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

உறுப்பினர்கள், தேசிய நீரியல் நிலஅளவையாளர் மற்றும் அலுவலகத்தின் அலுவலர்களும் ஊழியர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்

**43.** பேரவையின் எல்லா உறுப்பினர்களும், தேசிய நீரளவைசார் அளவையாளரும் மற்றும் அலுவலகத்தின் எல்லா அலுவலர்களும் ஊழியர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

அமைச்சரின் பணிப்புக்கள்

**44.** அமைச்சர் காலத்துக்குக்காலம், சட்டத்தின் குறிக்கோள்களுக்கும் அரச கொள்கைக்கும் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக, அலுவலகத்தின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் பற்றிய பொதுவான பணிப்புக்களைப் பேரவைக்கு வழங்கலாம்.

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வேறு எழுத்திலான சட்டத்திலும் பார்க்க மேலோங்கி நிற்றல்

**45.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் பயனுடையனவாதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க இச்சட்டத்தினதும் அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கிநிற்றலும் வேண்டும்.

**46.** (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவைதொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்

(2) குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள ஏற்பாடு களின் பொதுமைக்குப் பங்கமின்றியும் பின்வருவன தொடர்பாக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) இலங்கையின் நீர்ப்பரப்புக்கள் தொடர்பாக கப்பல்முறை சார்ந்த விளக்கப்படங்களைத் தயாரிக்கும் மற்றும் பேணும் விதமும் முறையும்;

(ஆ) நீரளவைசார் சேவைகளுடன் தொடர்புபட்ட சர்வதேச நடவடிக்கைமுறைகளை இசைவாக்குதல்;

(இ) நீரளவைசார் அளவைகள் நடாத்தப்படவேண்டிய முறையும் ஒரு நீரளவை தொடர்பிலான கப்பல்துறை சார்ந்த விளக்கப்படங்களும், செவ்வையான தாள்களும், எண்ணிமத்தரவுகளும் மற்றும் வேறு பதிவேடுகளும் தயாரிக்கப்படவேண்டிய படிவமும் முறையும் அத்தகைய கப்பல்துறைசார்ந்த விளக்கப்படங்கள், செவ்வையான தாள்கள், வெளிக்களப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் உட்புகுத்தப்படவேண்டிய விபரங்களும்;

(ஈ) நீரளவைசார் அளவைகளில் எய்தப்படவேண்டிய செம்மையின் அளவும் அனுமதிக்கப்படவேண்டிய பிழையின் வரையறையும்;

(உ) நீரளவைசார் அளவைகளின் செம்மையைப் பரீட்சிப்ப தற்கும் கண்டுபிடிக்கப்படக்கூடிய எவையேனும் செம்மை யீனங்களைத் திருத்துவதற்கும் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள்;

(ஊ) நீரளவைசார் அளவையாளரொருவரின் பதிவைப் புதுப்பிப்பதற்கு முன்னர் அத்தகைய ஆளினால் பெற்றுக் கொள்ளப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட கற்கை நெறிகளும் பயிற் சியும்;

(எ) பதிவுசெய்யப்பட்ட நீரளவைசார் அளவையாளர்களினாலும் கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலர்களினாலும் பின்பற்றப்படவேண்டிய வழிகாட்டுநெறிகள்;

(ஏ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவு செய்யப்படுவதற்கு உட்கருதுகின்ற ஆட்களினால் பின்பற்றப்படவேண்டிய தகைமையளிக்கின்ற பரீட்சைகளும் உயர்தொழிற்சார் பரீட்சிப்புகளும் தொடர்பான படிவமும் முறையும்; அத்துடன்

(ஐ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஒரு பதிவைப் பெற்றுக் கொள்வதற்கு உட்கருதுகின்ற எவரேனு மாளுக்குக் கல்விசார் மற்றும் உயர்தொழிற்சார் தகைமைகளை வழங்குகின்ற நிறுவனங்களைப் பதிவுசெய்தல்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் மூன்றுமாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின்முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) எத்தேதியன்று ஏதேனும் ஒழுங்குவிதிக்கு அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்படுகின்றதோ அத்தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**47.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பேரவையானது, பின்வரும் கருமங்கள் எல்லாம் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவைதொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்:- விதிகள்

(அ) இச்சட்டத்தின் கீழ் எக்கருமங்களுக்காக விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப் படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப் படுகின்றதோ அக்கருமங்கள்;

(ஆ) பேரவையின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையும்;

(இ) அலுவலகத்தின் அலுவலர்களினாலும் ஊழியர்களினாலும் பின்பற்றப்படவேண்டிய நடத்தைக் கோவையும் பதிவுசெய்யப்பட்ட நீரளவைசார் அளவையாளர்களினாலும் கப்பல் துறைசார்ந்த நிலப்படவியலர்களினாலும் பின்பற்றப்படவேண்டிய நடத்தைக் கோவையும்; அத்துடன்

(ஈ) அலுவலர்களினதும் ஊழியர்களினதும் நியமனமும், பதவியுயர்வும், ஊதியமும், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் லீவையும் ஏனைய வேதனாதிகளையும் வழங்குதலும்.

(2) அலுவலகத்தினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**48.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய — பொருள்கோடல்

"அணித்தாயுள்ள வலயம்" என்பது, ஆள்புலக் கடற்பரப்பின் அகலம் எந்த அடித்தளக்கோடுகளிலிருந்து அளவீடு செய்யப்படுகின்றதோ அந்த அடித்தளக்கோடுகளிலிருந்து இருபத்திநான்கு கடல்மைல்களுக்கப்பால் நீடிக்காதிருக்கக்கூடிய வலயம் என்று பொருளாகும்;

"எண்ணிமத் தரவுகள்" என்பத, நீரளவைசார் அளவை, கப்பல்துறைசார்ந்த விளக்கப்படம் தயாரித்தல் அல்லது தொடர்புபட்ட இடைநேர்விளைவான செயற்பாடுகளின் போது இலத்திரனியல் சாதனங்களைத் தொழிற்படுத்து வதன்மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது உருவாக் கப்பட்ட தகவல்கள் என்று பொருளாகும்;

"பிரத்தியேகப் பொருளாதார வலயம்" என்பது, ஆள்புலக் கடற்பரப்பின் அகலம்எந்த அடித்தளக்கோடுகளிலிருந்து அளவீடு செய்யப்படுகின்றதோ அந்த அடித்தளக் கோடுகளிலிருந்து இருநூறு கடல்மைல்களுக்கப்பால் நீடிக்காதிருக்கக்கூடிய வலயம் என்று பொருளாகும்;

"செவ்வையான தாள்கள்" என்பது, எண்ணி அல்லது படவகையான படிவங்களில் இடப்பட்ட ஆழ்வுமானத் தரவுகள் என்று பொருளாகும்;

"நீரளவை" என்பது, பொருளாதார அபிவிருத்தி பந்தோபஸ்தும் பாதுகாப்பும், அறிவியல் ஆராய்ச்சி மற்றும் சூழல்சார் பாதுகாப்பு உட்பட, கப்பற்போக்குவரத்தின் காப்பு என்ற பிரதான நோக்கத்துக்காகவும் வேறெல்லாக் கடல்சார் செயற்பாடுகளுக்கு ஆதரவாகவும், சமுத்திரங்கள், கடல்கள், கரையோர இடப்பரப்புக்கள், ஏரிகளும் ஆறுகளும் என்பவற்றின் பௌதிகச் சிறப்புப்கூறுகளின் அளவீட்டையும் விவரணத்தையும், காலப்போக்கின் போது அவற்றின் மாற்றம்பற்றிய எதிர்வுகூறலையும் கையாளுகின்ற பிரயோக விஞ்ஞானங்களின் கிளை என்று பொருளாகும்;

"நீரளவைசார் சேவைகள்" என்பது, கப்பல்துறைசார்ந்த விளக்கப்படங்கள், கப்பல்துறைசார்ந்த தகவல் தரவுத்தளங்கள் நீரளவைசார் தரவுகளிலிருந்து பெறப்பட்ட மற்றும் வேறு தயாரிப்புகள் என்பவற்றைத் தயாரித்தல், கப்பல்துறைசார்ந்த தகவல் முறைமை களினதும் தொடர்புபட்ட செயற்பாடுகளினதும்

அபிவிருத்தி என்பனவுட்பட, ஆழ்வுமான, நீரளவைசார், கரையோரக்கோடு, புவிப்பாத்து, புவியல் இடஞ்சார்ந்த, புவிக்காந்த மற்றும் கடல்பொங்குதலும் வடிதலும் நீர்மட்டம் அத்துடன் மின்னோட்டத் தகவல்கள் என்பவற்றின் முகாமை, பேணுகை, பொருள்கோடல், சான்றுப் படுத்துகை மற்றும் பரப்புகை என்பவற்றை உள்ளடக்கும்;

"நீரளவைசார் அளவை" என்பது, நீரளவையின் ஏதேனும் நடாத்துகை என்று பொருளாகும்;

"நீரளவைசார் அளவையாளர்" என்பது, நீரளவை என்ற விஞ்ஞாத்தைக் கற்றுச் செயல்முறைப்படுத்துகின்றரும் சர்வதேச ஒழுங்கமைப்புகளினால் விதிக்கப்பட்டவாறு சர்வதேசத் தகுதி நியமத்துடன் இணங்கியொழுகுகின்ற வருமான எவரேனுமாள் என்று பொருளாகும்;

"நீரியல் இடஞ்சார்ந்த" என்பது, பூமியின் நீர்ப்பரப்புகளின் மற்றும் அவற்றின் அணித்தாயுள்ள வலயங்களின் குறிப்பிட்டவோர் அமைவிடத்துடனும் காலத்துடனும் இணைந்துள்ள நீரியல் இடஞ்சார்ந்த விஞ்ஞானங்கள் அல்லது குறிக்கின்ற தரவுகள், தகவல்கள் அல்லது அறிவு என்று பொருளாகும்;

"உள்ளக நீர்ப்பரப்புகள்" என்பது, ஆள்புலக் கடற்பரப்பு எந்த அடித்தளக்கோடுகளிலிருந்து அளவீடுசெய்யப்படுகின்றதோ அந்த அடிதளக்கோடுகளின் நிலப்பக்கமாக அமைந்துள்ள நீர்ப்பரப்புகள் என்று பொருளாகும் என்பதுடன் இலங்கையின் ஆறுகள், ஏரிகள், குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் போன்றவற்றையும் உள்ளடக்கும்;

"கடல்சார்" என்பது, கப்பற் போக்குவரத்து அல்லது கப்பற்றொழில் தொடர்பான எதுவும் என்று பொருளாகும் என்பதுடன் கடலுடன் தொடர்புட்ட அல்லது சம்பந்தப்பட்ட எதனையும் உள்ளடக்கும்; அத்துடன் கடலில் பாவனைக்காகப் பயன்படுத்தப்படுகின்ற அல்லது

கடைப்பிடிக்கப்படுகின்ற பொருட்களையும் குறிப்பீடு செய்யப்படுகின்றது;

“கடல்சார் தரவுகள்” என்பது, கப்பற்போக்குவரத்து அல்லது கப்பற்றொழில் தொடர்பான தரவுகள் என்று பொருளாகும் என்பதுடன் கடலுடன் தொடர்புபட்ட அல்லது சம்பந்தப்பட்ட எவையேனும் தரவுகளையும் உள்ளடக்கும்; அத்துடன் கடலில் பாவனைக்காகப் பயன்படுத்தப்படுகின்ற அல்லது கடைப்பிடிக்கப்படு கின்ற தரவுகளையும் குறிப்பீடுசெய்கின்றது;

“கடல்சார் புவியியல் இடம்சார்ந்த தரவுகள்” என்பது, இலங்கையின் கரையோர வலயத்தில் சமுத்திரங்களின் ஆழம், சார்ந்த தன்மை, ஈர்ப்பு மாற்றங்கள், கடல்நீரில் ஒலியலைப் பரப்புகை, தட்பவெப்ப மற்றும் அமுக்க வேறுபாடுகள், சமுத்திர மின்னோட்டங்களின்தும் கடல் பொங்கியெலுதல்களினதும் வடிதகளினதும் செயற்பாடுகள் என்பனபற்றிய பாரிய தரவுகளை உள்ளடக்கம்;

“கடலோர” என்பது, கடலை எல்லையாகக் கொண்ட, அதனுடன் சம்பந்தப்பட்ட அல்லது தொடர்புபட்ட என்று பொரு ளாகும் ; அத்துடன்

“கடலோர வலயம்” என்பது, 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் கடலோர வலயம் என்று பொருளாகுமென்பதுடன் மேற்கூறப்பட்ட சட்டத்தின் நியதிகளின்படியான பிரகடனத்தின்மூலம் வெளிப் படுத்தப்பட்ட பின்வருவனவற்றையும் ‘‘கடலோர’’ என்பது, கடலை எல்லையாகக் கொண்ட, அதனுடன் சம்பந்தப்பட்ட அல்லது தொடர்புபட்ட என்று பொருளாகும்;”; அத்துடன் சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஓர் எதிர்காலத்தேதியில் வெளிப்படுத்தப் படக்கூடிய வேறேதேனும் வலயத்தையும் உள்ளடக்கும்:-

(அ) அணித்தாயுள்ள வலயம்;
(ஆ) பிரத்தியேகப் பொருளாதார வலயம்;

(இ) கண்ட ஓடு; அத்துடன்

(ஈ) தீழ்ப்புத் தடுப்பு வலயம்

"*அமைச்சர்*" என்பது, அரசியலமைப்பின் உறுப்புரை 44 அல்லது 45 இன்கீழ் பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

"*கப்பல்துறைசார்ந்த நிலப்படவியல்*" என்பது, மனிதர்கள் முடிபுகளைச் செய்வதற்கும் அவர்களின் பணிகளைப் புரிவதற்கும் உதவுகின்றதும் கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள்மூலம் இலத்திரனியல் அல்லது அச்சிடப்பட்ட கப்பல்துறைசார்ந்த விளக்கப்படங்களை வெளிப்படுத்துகின்றதுமான கலை மற்றும் விஞ்ஞானம் என்று பொருளாகும்;

"*கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலர்*" என்பது, இலத்திரனியல் அல்லது அச்சிடப்பட்ட கப்பல்துறைசார்ந்த விளக்கப்படங்களை வரைவதிலும் நிர்மாணிப்பதிலும் தொழிலுக் கமர்த்தப்பட்டவரும் சர்வதேச ஒழுங்கமைப்புகளினால் விதிக்கப்பட்டவாறான சர்வதேசத் தகுதி நியமத்துடன் இணங்கியொழுகுகின்றவருமான ஆள் என்று பொருளாகும்;

"*கப்பல்துறைசார்ந்த விளக்கப்படம் தயாரித்தல்*" என்பது, நீர்நிலைகள்பற்றிய எண்ணிம அல்லது அச்சிடப்பட்ட விளக்கப்படமொன்றைத் தயாரிக்கும் செயற்பாடு அல்லது செயல்முறை என்று பொருளாகும்;

"*கப்பல்துறைசார்ந்த விளக்கப்படம்*" என்பது, நீரின் ஆழங்கள், கடலடியின் தன்மை, உயரங்கள், தோற்றப்பாடு மற்றும் கரையோரத்தின் பண்பியல்புகள், அபாயங்கள் மற்றும் கப்பற் போக்குவரத்துத் துணைப்பொருட்கள் என்பனவற்றைக் காட்டுகின்ற கடல்சார் கப்பற்போக்குவரத்தின் தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்குக் குறிப்பாக வடிவமைக்கப்பட்ட ஒரு விளக்கப்படம் என்று பொருளாகும்;

"கப்பற்போக்குவரத்து" என்பது, ஒருபுள்ளியிலிருந்து இன்னொன்றுக்கு ஒரு மரக்கலத்தின் நடமாட்டத்தைப் பணிக்கின்ற செயல்முறை என்று பொருளாகும்;

"கடலோடிகளுக்கான அறிவித்தல்கள்" என்பது, கப்பல் துறைசார்ந்த விளக்கப்படங்களுக்கும் வெளியீடுகளுக்குமான திருத்தங்கள் என்று பொருளாகும். கடலில் காப்பாகவிருப்பதற்கு அதிமுக்கியமாகவுள்ள தகவல்களை மட்டுமே இவை கொண்டிருக்கின்றன;

"சமுத்திரம்" என்பது, நிலத்தை அல்லது முக்கிய அல்லது பாரிய கடலைச் சூழவுள்ள பூலோகத்தின் மேற்பரப்பின் மீதான பெருமளவினதான நீர்நிலை அல்லது இந்நீர்நிலை புவியியல்ரீதியில் எந்த முக்கிய கடற்பரப்பினுள் பிரிக்கப்பட்டுள்ளதோ அந்த முக்கிய கடற்பரப்புகளுள் ஒன்று என்று பொருளாகும்;

"தீழ்ப்புத்தடுப்பு வலயம்" என்பது, இலங்கையின் ஆள்புல நீரிப்பரப்புகளில் அல்லது வேறேதேனும் கடலோர வலயத்தில், அதன் முற்கரையில் மற்றும் இலங்கையின் கரையோர வலயத்தில், கப்பல் அடிப்படையிலான செயற்பாட்டிலிருந்தும் கரை அடிப்டையிலான கடல்சார் தொடர்புடைய செயற்பாட்டிலிருந்தும் எழுகின்ற தீழ்ப்பைத் தடுப்பதற்கு, குறைப்பதற்கு, கட்டுப்படுத்துவதற்கு மற்றும் முகாமைசெய்யவதற்கு வகுத்தமைக்கப்பட்ட வலயம் என்று பொருளாகும்;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும்;

"பகிரங்க அலுவலர்" என்பது, அரசியலமைப்பின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"கடல்" என்பது, நிலம் தவிர்ந்த, பொதுவான பெருமள வினதான உவர்நீர் என்ற பொருளாகும்;

"ஆள்புல நீர்ப்பரப்புகள்" என்பது, இலங்கையின் ஆள்புலக் கடலையும் வரலாற்று முறையான நீர்ப்புரப்புக்களையும் உள்ளடக்கும்; அத்துடன்

"இலங்கையின் நீர்ப்பரப்புக்கள்" என்பது, இலங்கையின் உள்ளக நீர்ப்பரப்புக்களையும் ஆள்புலக் கடலையும் உள்ளடக்கும் அத்துடன்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**49.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*